**கன்மலையானவர்**

என் கன்மலையானவர் துதிக்கப்படுவீராக
என் ரட்சிப்பின் தேவன் உயர்த்தப்படுவீராக

நீர் என் கன்மலை, என் கோட்டை
என் ரட்சகர், என் தேவன்
நான் நம்பும் துருகம், என் கேடகம்
உயர்ந்த அடைக்கலம், ரட்சண்ய கொம்பு

என் பெலனாகிய கர்த்தாவே
நான் உம்மில் அன்பு கூறுவேன்

ஆபத்து நாளில் எதிரிட்டு வந்தார்கள்
கர்த்தரோ ஆதரவா இருந்தீர்
விசாலமான இடத்திலே என்னை
கொண்டு வந்து நீர் தப்புவித்தீர்

என்னிலும் அதிக பலவான்கள் பகைஞர்கள்
நெருக்கும் போது நான் அபயமிட்டேன்
உயரத்தில் இருந்து உம்கரம் நீட்டி
என் கரம் பிடித்து தூக்கி விட்டீர்